Publication No. 106.

574

SIDDHANTA TRAYAM

THE TANJORE MAHARAJAH SERFOGI'S SARASWATHI MAHAL LIBRARY, TANJORE
574

9

539

DHARMAPURAM ADHINAM.

His Holiness Sri-la-Sri Subramanya Desika Gnanasambanda
Paramacharya Swamigal
25th in the Holy Line of Dharmapuram Adhinam

Publication No. 106. 539

VINA VENBA, KODIKKAVI

AND

LIGHT ON THE TRUE PATH

(with Tamil Explanation and English Translation)

Published according to the orders of

His Holiness Sri-la-Sri Subramanya Desika
Gnanasambanda Paramacharya Swamigal
25th in the Holy Line of
Dharmapuram Adhinam.

By

Sri-la-Sri Mouna Somasundara Thambiran Swamigal,
of Trichy Mouna Mutt attched to the above Adhinam.

All rights reserved.

1946.

First Edition 1946.
Copies 1000.

The Gnanasambandam Press,
Dharmapuram.

FOREWORD

The three small works, *Vinavenba, Kodikkavi* and *Unmaineriviłakkam,* which are contained in this publication, form part of the philosophic anthology in Tamil, called *Saiva-Siddhanta Shastras* or *Meykanda Shastras.* The authorship of all the three is usually ascribed to *St. Umapati Sivacharya;* but it must be noted that recent research has led scholars to attribute the last of the three to *Sri Tattvanada* of Shiyali, a disciple of the author of *Tukalaru Bodham,* a valuable work in Tamil on Saiva-Siddhanta

The first of the three, *Vinavenba,* consists for the most part, even as the title suggests, of questions that the author puts to his master, *St. Maraijnana Sambandha,* after being initiated into the path of the (ancient) Divine wisdom (சிவஞானபோத நெறி), and led to see the Divine presence (siva chaitanya) in his self. The questions, however, are intended to elicit answers from the reader, who, it is presupposed, has had a deep study of the three most important works, *Sivajnana Bodham, Sivajnana Siddhi,* and *Sivaprakasam.* These questions are so chosen as to lead the reader to grasp and fix in mind

the basic principles of philosophy, and appreciate the harmony that exists between the spiritual experience, though transcendent, and our worldly experience. It is this harmony that is the real test to find out whether a system of philosophic thought is a mere hypothesis or a synthesis of eternal truth, whether it is only a product of a speculative mind or a scientific and logical presentation of facts experienced in the super-physical conscience states (சுத்தாவத்தை). The need for a correct understanding of the import of the work for the disciple, in his onward march of spiritual progress, is stressed in the last stanza. It is said there that any amount of scriptural knowledge of one who does not care to grasp the import of *Vinavenba*, will be of no use, i. e., the scriptural knowledge cannot be translated into spiritual experience, even as the dream of a dumb man cannot be given expression to, ie., cannot be translated into words, self expression.

Kodikkavi, the second work, indicates the significance, the esoteric meaning, of the annual festivals that are conducted in the Saiva temples. This we are led to infer from the explanation that is given of the purpose of the initial ceremony of raising the flag of the Lord, at the commencement of the festival. The ceremony signifies the initiation of the disciple into the path of Divine

wisdom (Urdhva or Nivritti Marga as opposed to the adhah or pravritti Marga) called, in the language of the Saiva Shastras, Nirvana Diksha or Jnana Diksha, which consists in cleansing the disciple's soul of the dirt of the accumulated Karma (Sanchita), so that the soul may catch the spark of Divine wisdom that is to be imparted to it by the guru, and shine in the all pervading Divine effulgence of Grace. The festivals that follow indicate the various means such as imparting instruction in the tenfold action (Dasa Karya) in the realization of the true wisdom, and in the significance and use of the five syllabled formula (panchakshara), by which the disciple is led, step by step, to reach the final goal, the highest state of perfection, and, reaching it, to maintain it, without once again slipping into the ways of the world (pravritti Marga) and thus getting entangled in the cycle of births and deaths.

The third, viz., *Unmaineri Vilakkam,* deals with the ten actions, (or rather stages) involved in the realization of the true wisdom. The tamil phrase, '*Unmaineri*' is an equivalent of 'Sanmarga', which term always indicates the 'Jnana marga', or the Super perception which the individual conscience called the self (*Jiva Atma*) has with the aid of the Light of grace of the universal conscience, the supreme Being, the Paramatma, even as it had the

physical perception (pasajnana) when in conjunction with the body, being aided by the various organs, gross and subtle, in it. '*Vilakkam*' is a tamil word, meaning lamp or *Dipa*. Hence the work is purposed to illumine or throw light on the super-perception, known as *Sivajnana*, by giving an account of its various aspects, or stages, and the corresponding spiritual experiences. Here, a few words need be said by way of explanation.

It is natural for the soul (and this is a commonly accepted fact) in its perception, to proceed from the known to the unknown, the gross to the subtle. A familiar example of this procedure is the way in which a man is directed to look at the first appearance of the crescent moon. The man directed, first casts his eye on a branch of a tree which happens to lie in close proximity to the line of vision of the moon: then his eye is moved to an object which is higher than the branch and nearer the line of vision; perhaps a floating mass of cloud: and finally he sights the moon. In all such cases, there are three distinct aspects (or stages) of perception: (1) the perception of the known or the gross, (2) the stage in which the perception alternates between the known and the unknown, the gross and the subtle, i. e., in the example cited, looking in the direction of the object, but not at the object itself, and (3) the

perception of the object itself. The fiirst of these, the perception of the known, the gross, leads to the perception of the unknown, the subtle; but it is not the perception of the unknown, the subtle, sure. So this is called the gross perception (திரியக்காண்டல்); the second is called the dual perception (இட்டுறக்காண்டல்) and the third the clear perception (தெளியக்காண்டல்). In the language of the Saiva philosophy these three aspects or stages or kinds of perception are indicated by the terms, Rupa (உருவம்), Darshana (காட்சி) and Suddhi (தெளிவு) respectively.

Now, as each of the three *padarthas* (things) *pasa, pasu* and *pathi* or the material world, the Atma (i e., the individual conscience called soul) and the Supreme Being (i e., the universal conscience) is perceived in these three ways, we have nine karyas or actions pertaining to the soul's power to know (i e., Jnana Shakti of the Atma).

The three kinds of perception of the material world are called respectively the *Tattva Rupa*; the *Tattva Darshana* and the *Tattva Suddhi.* Here the material world is called Tattva because it is in the form of Tattvas (the objects and the material instruments aiding the soul to have obejective conscience), enumerated to be 36, that the soul is affected. Of these, 31 tattvas constitute the three-fold physical body of the soul (the causal, the

subtle and the gross body), and the remaining five called Siva tattvas instigate the other tattvas to be active.

Similarly, the three stages or aspects of perception or cognizance of the self (the Atma, the individual conscience) are respectively called Atma Rupa, Atma Darshana and Atma Shuddhi. and those connected with the universal conscience, the paramatma, are called Siva Rupa, Siva Darshana and Siva yoga respectively.

Thus we have nine stages, or Karyas in the onward march of the soul in the path of Jnana. As these nine karyas are clearly explained in the work itself, no explanation need be given here of them. But it must be understood that, in the last three of these Karyas, *Siva Rupa, Siva Darshana and Siva yoga*, it is only the *Shakti* aspect of the Lord, His Grace, that is cognized, and in *Siva yoga*, the soul becomes one with *Grace*, having lost even the last traces of the evil effects of its former association with the evil principle, *Anava* (பசுத்துவ வாசனை). The *Aham Brahma* (I am Brahman) Jnana, the Siva Samavada (I am equal to the Lord) Jnana, and the Jnana which causes the *Sadhaka* (aspirant) to say that he can effect the five cosmic actions (*Panchakrityas*) even as the Lord does, are experiences caused by the lingering traces of the principle of evil (பசுத்துவ வாசனை). Siva yoga is the

stage when these experiences have been surpassed, and the soul realizes that it has no existence independent of the Lord's grace and no action other than that of the Lord. Even at this stage, the Supreme Bliss (*Sivanada anubhava*) of the Lord is not experienced, it is only the ray of the Bliss (Sukha prabha) that is experienced. It is called the *Turiya* in the *Suddha* state (துரிய அருணிலை). The true *Turiyathita* state (துரியாதீத ஆநந்தநிலை) is yet to come. The Turiyathita is the state in which the soul loses its individuality completely and experiences the manifestation of the Supreme Bliss (ஆநந்தவிளக்கம்), *Sukhanubhava*, becoming one with the Supreme Being in inseparable union. This is called *Siva bhoga*, the tenth stage. This is the state of para Mukti (பரமுத்திநிலை). Even in this state the soul exists; its powers to know, to desire and to act (ஞான, இச்சா, கிரியாசத்திகள்) remain in tact and they are directed towards the universal conscience; only, the soul does not reflect that it cognizes and make the Lord its object. St. Manickavachaka refers to this experience when he says of the Lord that He is one that cannot be cognized by those that cognized Him (உணர்ந் தார்க்கு உணர்வரியோன்)*

---

*cf. "ஞானமு ஞேயப்பொருளும்— பற்றும்
ஞாதாவும் இல்லையென்பார்க் கரியாராம்;
ஞானமு ஞேயப்பொருளும்—பற்றும்
ஞாதாவுமாய்ப் பகுப்பார்க்கும் எட்டாராம்."-which means:-

'He cannot be reached by those that deny the existence of the **knowing**, the **known** and the **knower**. He transcends those that wish to see Him with the discrimination, the **knowing** , the **known** and the **knower**.'

It should be borne in mind that as the three *Padarthas* (*pati*, *pasu*, and *pasa*) mentioned are not exclusive, but coexist, and are interrelated, the order in which these ten stages (*Dasakaryas*) are experienced is not exactly the same order in which they are enumerated. Tattva Rupa, and Tattva Darshana lead to Tattva Suddhi and Atma Rupa; Then comes Siva Rupa, and it leads to Atma Darshana, then Siva Darshana lifts the soul to Atma-suddhi, which is immediately followed by Siva yoga.

These three works are published with Tamil word by word explanation, and English-rendering. The Tamil explanations of Vinavenba & Kodikkavi are those of Sri Namasivaya Tambiran of Tiruvavaduturai Adhinam; and that of the third is one written by Sri Isvaramurthi Pillai of Tinnavelli Pettai (Teacher, Board School, Uttiramerur) in accordance with the old commentary. The English rendering, together with the brief introductions and explanatory notes was written by the well-reputed Saiva-Siddhanta Scholar, Late Sri J. M. Nallaswamy Pillai, B. A., B. L., and contributed to the "Siddhanta Dipika". Mention may be made here

that copyright of all the works by Sri Iswaramurthi Pillai has been obtained, as of those of Sri J. M. Nallaswami Pillai, by the Dharmapuram Adhinam.

This publication is made on the occasion of the Monthly Birth day worship of His Holiness Sri-la-Sri Subrahmanya Desika Gnanasambandha Paramacharya Swamigal, the 25th in descent of the Thirukkailaya paramparai Dharmapuram Adhinam, at on 15—4—1946.

It behoves me to express on behalf of the public and on my own behalf the deep debt of gratitude which we owe His Holiness for the various publications of the Adhinam and such other benign acts for the propagation of the Leading Light of the Ancient Divine wisdom.

Mayavaram,
7—2—46.

K. Vajravelu Mudaliar,
Dharmapuram Adhinam Tamil Pulavar
Principal. Meykandar Saiva Siddhanta College.

உ

திருச்சிற்றம்பலம்

வினா வெண்பா

VINA VENBA

This is one of those that constitute the Siddhanta Ashtakam composed by Saint Umapathi Sivacharya. The name means a Poem in *Venba* metre containing queries; and is in the nature of *Irupa Irupahtu* of St. Arul Nandi Sivacharya, and contains a number of Philosophical paradoxes. The object is to bring more into prominence how Saiva Siddhanta reconciles our various difficulties in philosophic investigation. We give the text and translation with such notes as are necessary.

நீடும் ஒளியும் நிறைஇருளும் ஓரிடத்துக்
கூடல் அரிது கொடுவினையேன்—பாடிதன்முன்
ஒன்றவார் சோலை உயர்மருதச் சம்பந்தா!
நின்றவா றெவ்வாறு நீ?

நீடும் ஒளியும் நிறை இருளும் ஓர் இடத்துக் கூடல்அரிது-விரிந்த பிரகாசமும் நிறைந்தஇருளும் ஓரிடத்திலே கூடமாட்டாது, கொடுவினையேன் பாடு இதன் முன் - கொடியவினையேன் பக்கல் தரிசிப்பதற்குமுன், வார் சோலை உயர் மருதச் சம்பந்தா! நீ ஒன்ற நின்றவாறு எவ்வாறு?—அழகியசோலையுயர்ந்த மருதநகர்வாழ் சம்பந்த மாமுனிவனே! தேவரீர் அடியேனிடத்துப் பொருந்த நின்றது எப்படி?

இதனால் அந்தகன் கண்ணுக்கு ஆதித்தப் பிரகாசம் வியாத்தமாயிருந்தும் தெரியாத தன்மைபோலென்பது பெறப்பட்டது.

The spreading Light and darkness deep in same
Place doth not join. In me great sinner 'fore
In union, Oh Sambandha of Maruthur
By lofty groves girt round, How didst Thou stand?

NOTES.

The author speaks of his condition before sighting his Guru, because his *mala* left him by the Satguru-darsana. But God dwelt in him before, and yet he did not profit by it. His *Pasa* acted as a veil between him and God, as the cataract covering the eye prevents him from seeing the sun which shines all through. 1

இருளில் ஒளிபுரையும் எய்தும் கலாதி
மருளின் நிலையருளும் மானுங்—கருவிஇவை
நீங்கின் இருளாம் நிறைமருதச் சம்பத்தா!
ஈங்குன்அரு ளால்என் பெற?

இருளில் ஒளி புரையும்—ஆணவமேவிட்ட காலத்து ஞானம் ஒழிந்துநிற்கும், எய்துங் கலாதி மருளின் நிலை அருளும் — கலாதிகளைப் பொருந்திய விடத்தும் ஆணவத்தையே நிலைநிறுத்தும், மானுங்கருவி இவை நீங் கின் இருளாம் - ஒப்பற்ற கருவி அடியேனை நீங்கின பொழுது இருளாயிருக்கும், நிறை மருதச் சம்பந்தா! ஈங்கு உன் அருளால் என்பெற? – நிறைந்த மருதநகர் வாழ்சம்பந்தமாமுனிவனே! இவ்விடத்து உன்னருளால் பிரயோசனம் யாது?

இதனுல் சுத்தத்திற் பயனென்பது பெறப்பட்டது.

In darkness doth light vanish, in Kala's
Joined, evil doth persist. The organs rare
Removed, the darkness fills again Oh Lord,
Here then of what use is Thy divine grace?

NOTES.

Even in all these conditions of the soul, the Divine Grace is ever active and He creates, protects, resolves and obscures. He is ever with us, even in our worst acts and is giving us help and grace to get over our toils. When we can fully recognize His ever active Presence and submit our Will to His, then do we reach the *Suddha* condition and God's Bliss. 2

புல்லறிவு நல்லுணர்வ தாகா பொதுஞானம்
அல்லதில துள்ளதெனில் அன்னியமாம்-தொல்லையிருள்
ஊனமலே யாவா றுயர்மருதச் சம்பந்தா!
ஞானமலே யாவாய் நவில்.

புல் அறிவு நல்லுணர்வது ஆகா பொது ஞானம் - சிற்றறிவு பேரறிவாகாது பொது ஞானத்தால், அல்லது இலது உள்ளது எனில் அந்நியமாம்-அல்லது முன்பில்லாத சிவஞானம் மலபரிபாகத்திலே உண்டாமென்னில் சற்காரிய வாதமாகாமல் அந்நியமேயாம், தொல்லை இருள் ஊனம் அலையாவாறு உயர்மருதச் சம்பந்தா! ஞானமலை ஆவாய் நவில் - பழைய ஆணவமலக் குற்றத்தால் மயங்காத முறையிலுயர்ந்த மருதநகர்வாழ் சம்பந்தமாமுனிவனே! மலைபோன்ற ஞானத்தை யுடையவனே! திருவாய் மலர்ந்தருளவேண்டும்.

இதனால் ஆன்மஞானம் சிவஞானமாகாதென்பது பெறப்பட்டது.

The Small does not become the Perfect Mind,
Is common sense. If Perfect Mind doth rise
Anew, it can't be true ; Oh Sambandha
Of old faults free, Oh Rock of Wisdom, say.

NOTES.

The intelligence of the soul by itself is neither small nor imperfect and it does not grow big nor perfect by evolution. It is perfect in a sense but its intelligence is covered, veiled by *Anava* and when this is removed, it shines bright again. as a crystal cleansed of dirt. And then the Light which it reflects is not its own but of the Lord, and it was passing through the crystal even when dirt covered, but is only reflected after the cleansing. So this Sivajnanam is neither the

Intelligence of the soul, nor did it arise anew, when the soul recovered itself. These points have to be borne very clearly in mind in trying to understand the basic principles of Saiva Siddhanta; otherwise it is apt to be confused with other systems. 3

கனவு கனவென்று காண்பரிதாம் காணில்
நனவில் அவைசிறிதும் நண்ணா - முனைவன்அருள்
தான்அவற்றில் ஒன்றா தடமருதச் சம்பந்தா!
யான்அவத்தை காணுமா றென்?

கனவு கனவென்று காண்பரிதாம் - கனவிலே நின்று கனவினைக்காணப்படாது, காணில் நனவில் அவை சிறிதும் நண்ணா - நனவிற் காணும் கண்டதென்னில் அங்கு அக் கருவிக ளில்லாமையாலே சிறிதுங் காணமாட்டாது, முனைவன் அருள் தான் அவற்றில் ஒன்றா - அருளிலே நின்று கண்டதென்னில் அருள் அவத்தைகளிற் பொருந்தமாட்டாது, தடமருதச் சம்பந்தா! யான் அவத்தை காணுமாறு என்? - தடாகம் பொருந்திய மருதநகர்வாழ் சம்பந்த மாமுனிவனே! அடியேன் அவத்தைகளைத் தரிசிக்குமுறை யெப்படி ?

இதனால் சுத்த தத்துவங்களைக் கொண்டறியவேண்டுமென்பது பெறப்பட்டது.

The Dream cannot be seen as dream in dream;
If seen awake, it cannot be pursued;
Lord's Grace? He doth not join the avastas.
How then, Oh Lord, do I perceive the same?

NOTES.

One cannot think thought but when one rises to the Highest *Suddha* condition this is in a sense possible. 4

அறிவறிந்த தெல்லாம் அசத்தாகும் ஆயின்
குறிஇறந்த நின்உணர்விற் கூடா – பொறிபுலன்கள்
தாமா அறியா தடமருதச் சம்பந்தா!
யாம்ஆர் அறிவார் இனி?

அறிவு அறிந்தது எல்லாம் அசத்தாகும் ஆயின் - அடியேன் அறிவினால் அறியப்பட்டவனைத்தும் அசத்தா யழிந்துபோம் எனின், குறி இறந்த நின் உணர்வில் கூடா -குறியினைக் கடந்த தேவரீருடைய ஞானத்திலே பொருந்த முடியாது, பொறி புலன்கள் தாமா அறியா - பொறிபுலனாகிய தத்துவங்கள் தாமே ஒன்றனையும் அறியமாட்டாது, தடமருதச் சம்பந்தா! யாம் ஆர் அறிவார் இனி? - தடாகம் பொருந்திய மருதநகர்வாழ் சம்பந்தமா முனிவனே! யான் யாரை அறியப்போவதினி?

இதனால் ஆன்மா அருளோடுசேர்ந்து பாசநீங்கி அருளாய் நிற்குமென்பது பெறப்பட்டது.

All that perceived by mind is Asat, so
Thy Mind beyond all mark I can't perceive
Sense organs can't perceive by themselves, Lord
Of Maruthur ; What then am I to see ?

NOTES.

All that we can perceive can be objective only. The object cannot perceive the subject. If we can perceive God, He should become objective to us, but this cannot be, as He is the True subject, the very Thinker of our thoughts, as the Upanishad (*Brihad-II. 4-13*) pertinently puts it, "How should he know Him by Whom he knows all this? How, Oh beloved, should he know the Knower?"

"Thou couldst not see the seer of sight; thou couldst not hear the hearer of hearing; thou couldst not perceive the perceiver of perception; nor know the knower of knowledge. This is thy Atma (God) Who is within all. Every thing else is of evil (Asat)." (*Brihad III, 4, 2*).

The *Taitiriyopanishad* declares (II. 9). "From all words fall back, not reaching and mind as well." Man can perceive God by His Grace alone. "A man who has left all grief behind sees the Majesty, The Lord, The Passionless by the Grace of the Creator." (*Svetas III 20*). 5

சிற்றறிவு முன்சிதையிற் சேர்வார்இன் னும்சிறிது
மற்றதனில் நிற்கில்அருள் மன்னுவாம் - துற்றமுகில்
மின்கொண்ட சோலை வியன்மருதச் சம்பந்தா!
என்கொண்டு காண்பே னியான்?

சிற்றறிவு முன் சிதையின் சேர்வார் இன்றாம், - சிற்றறிவு முன்னே கெடுமாயின் பின் அருளைப் பெறும் பேறு இல்லையாம்; சிறிது மற்று அதனில் நிற்கில் அருள் மன்னாவாம் - சிற்றறிவு சிறிதாக அதில் நின்றாலும் அருள் பொருந்தாதாம், துற்ற முகில் மின் கொண்ட சோலை வியன்மருதச் சம்பந்தா! என்கொண்டு காண்பேன் யான்?- நெருங்கிய மேகங்களோடு பிரகாசத்தைக்கொண்ட சோலை சூழ்ந்த பெரிய மருதநகர்வாழ் சம்பந்த மாமுனிவனே! எதைக்கொண்டு காணவல்லேன் யான் ?

இதனால் சிற்றறிவு கெட்டதும் அன்று, முன்போலிருந்ததும் அன்று; பாசபந்தநீங்கித் திருவடியிலே கலந்துகிடக்கும் என்பது பெறப்பட்டது.

If self is lost before, there is none to join;
If self remains in part, Grace will not fall.
Oh Sambandha of Maruthur, with groves
Cloud-capped, with what can I perceive Thy Self?

NOTES.

This states the same puzzle which St. Meikandan had stated before in XI, 2, 5. In mukti union, if soul perishes before union, then there is nothing to unite with God. If it does not perish, there will be duality. Losing one's mala, it sinks into God as the salt dissolved in water, losing not its personality but its individuality, its sense of 'I-ness' and 'my-ness,' 'நான்கெட்டு' dedicating all its acts and Will to God; it is then that he becomes One with God, or God alone becomes Supreme,

"நான்கெட்டுச் சிவமானவா", "சென்று சென்று அணு வாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றும் திருப்பெருந்துறையுறை சிவன்." 6

உன்னரிய நின்உணர்வ தோங்கியக்கால் ஒண்கருவி
தன்அளவும் நண்ணரிது தானாகும் - என்அறிவு
தான்அறிய வாரா தடமருதச் சம்பந்தா!
யான்அறிவ தெவ்வா றினி?

உன்னரிய நின் உணர்வது ஓங்கியக்கால் - நினைத் தற்கரிய தேவரீரருள் தோன்றியகாலத்தில், ஒண் கருவி நண்ணரிது தான் ஆகும் - ஒப்பற்ற கருவிகள் முப்பத்தாறு லும் பொருந்தப்படாது, என் அறிவுதான் அறிய வாராது- என்னுடைய பசுஞானத்தாலு மறியப்படாது, தடமருதச் சம்பந்தா! யான் அறிவது எவ்வாறு இனி - தடாகம் பொருந்திய மருதநகர்வாழ் சம்பந்தமாமுனிவனே! அடி யேன் அறிவது எப்படி யினி ?

இதனால் ஆன்மா அருளேமயமாக நின்றறியுமென்பது பெறப் பட்டது.

Thy grace past Thought when It did rise, the bright
Tattvas can't apprehend. And my own *Jnan*
Can't sense the same. O Lord of Maruthur
By large ponds girt, How then can I know Thee ?
7

அருவேல் உருவன் றுருவேல் அருவன்(று)
இருவேறு மொன்றிற் கிசையா—உருஓரிற்
காணில் உயர்கடந்தைச் சம்பந்தா! கண்டவுடற்
பூணுமிறைக் கென்றும் புகல்.

அருவேல் உருவன்று உருவேல் அருஅன்று, இரு வேறும் ஒன்றிற்கு இசையா - கர்த்தா அருவமானால் உருவமாகமாட்டான் உருவமானால் அருவமாகமாட்டான் அருவும் உருவும் ஒரு பொருளுக்கிசையாது, உரு ஓரில் காணில் உயர் கடந்தைச் சம்பந்தா ! கண்டவுடல் பூணும் இறைக்கு என் ஆம் புகல் - திருமேனியை விசாரித்துப் பார்க்கில் உயர்கடந்தைநகர்வாழ் சம்பந்தமாமுனிவனே! கொண்ட திருமேனியைப் பூணப்பட்ட கர்த்தாவுக்கு அத்திருமேனி எதனாலுண்டானது? திருவாய்மலர்ந்தருள வேண்டும்.

இதனால் கர்த்தா ஞானத்திலே திருமேனிகொள்ளுவன் என்பது பெறப்பட்டது.

If formless God can have no form, if with form,
He can't be formless ; both can't apply to one,
O Sambandha of Tirukadanthai,
How then does God assume His blessed Form ?

NOTES.

Rupa and Arupa and Ruparupa are all terms applying to matter. God is not matter but is Pure Chit. And all His Forms are out of Chit, out of His Chit-Sakti, of the Form of grace Divine, and He can assume any Form He likes and in which He is thought of by His Bhaktas. See verses 38 to 70 of Sutra I, of *Siddhiyar* and my notes thereon. 8

இருமலத்தார்க் கில்லை உடல்வினைஎன் செய்யும்
ஒருமலத்தார்க் காராய் உரைப்பேன்—திரிமலத்தார்
ஒன்றாக உள்ளார் உயர்மருதச் சம்பந்தா !
அன்றாகில் ஆமா றருள்.

இருமலத்தார்க்கு உடல் இல்லை வினை என் செய்யும் - இருமலமுடைய பிரளயாகலருக்கு மாயை யின்றாதலால் உடம்பில்லை வினை புசிக்கும் வகை யாது?, ஒரு மலத்தார்க்கு ஆராய் உரைப்பேன் - ஒருமலமுடைய விஞ்ஞானாகலர்க்கு உவமை யாராகச் சொல்லுவேன், திரி மலத்தார் ஒன்றாக உள்ளார் - மும்மலமுடைய சகலருக்கன்றோ ஒன்றாக உள்ளது, உயர்மருதச் சம்பந்தா! அன்றாகில் ஆம்ஆறுஅருள்-உயர்ந்த மருதநகர்வாழ் சம்பந் தமா முனிவனே! அப்படியல்லவாகில் ஆகும்படி அருள வேண்டும்.

இதனால் விஞ்ஞானாகலருக்கும் பிரளயாகலருக்கும் சுத்த மாயையிலே தேகமென்பது பெறப்பட்டது.

Those with two Malas have not body sure
How will Karma affect ? What then of Those
With one Mala ? The Three mala covered stand
Alone, Oh Lord, if not, How then explain ?

NOTES.

There is often a misunderstanding that when Vijnanakalars, Pralayakalars, and Sakalars are said respectively to have one mala, two and three ~~respectively~~, the first two classes have no corporeal bodies. The

author tries to remove this misapprehension and we had long ago tried to point this out in our table of Tattvas (Vide *Studies in Saiva Siddhanta* page 35). The Third mala here means only Asuddha Maya and *Pralayakalars* and *Vijnanakalars* have their bodies in Suddha Maya, Tattva such as Nadha, Vindu &c. 9

ஒன்றிரண்டாய் நின்றொன்றில் ஓர்மையதாம் ஒன்றாக
நின்றிரண்டாம் என்னிலுயிர் நேராகும்—துன்றிருந்தார்
தாங்கிவாழ் தண்கடந்தைச் சம்பந்தா ! யானாகி
ஓங்கியவா றெவ்வா றுரை ?.

ஒன்று இரண்டாய் நின்று ஒன்றில் ஓர்மையதாம் - ஒருபொருள் விவகாரத்தில் இரண்டாய் நின்று ஒன்றாமென்னில் ஒன்று பொருந்தமாட்டாது, ஒன்றாக நின்று இரண்டாம் என்னில் உயிர் நேராகும் - இரண்டாய் நின்று ஒன்றாமென்னில் ஒன்றில் ஒன்று அழிந்துபோம், துன்றிருந்தார் தாங்கி வாழ் தண் கடந்தைச் சம்பந்தா? யானாகி ஓங்கியவாறு எவ்வாறு உரை - ஞானந்தங்கிய பெரியோர் தங்கி வாழப்பட்ட வயல்சூழ்ந்த கடந்தைநகர் வாழ் சம்பந்த மாமுனிவனே! யான் சிவமாகி ஓங்கிய முறைமையைத் திருவாய்மலர்ந்தருளவேண்டும்.

இதனால் ஆணவத்தைப் பொருந்தின ஆன்மாவைப்போலவென்பது பெறப்பட்டது.

If One did part in two and one become
True One-ness won't result. If Two, One doth
Become, the soul will die. Oh Kadanthai's Lord
How then did I become raised as Sivam?

NOTES.

The old puzzle is stated in another form. The relation between the two is Advaita or ananya and the soul's nature and connection is such that it becomes one with whatever it is attached to, losing its own individuality. But for this peculiar nature of Jiva, postulated in Siddhanta, this One-ness is not possible. 10

காண்பானுங் காட்டுவதுங் காண்பதுவும் நீத்துண்மை
காண்பார்கள் நன்முத்தி காணார்கள்—காண்பானுங்
காட்டுவதுங் காண்பதுவுந் தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டுநெறி வாரா தவர்.

காண்பானும் காட்டுவதும் காண்பதுவும் நீத்து உண்மை காண்பார்கள் - காண்கின்ற ஆன்மாவும் காட்டுகின்ற சிவனும் காணப்படுகின்ற பொருளும் விட்டு உண்மையைத் தரிசிப்பார்களென்னில், நல் முத்தி காணார்கள் - நல்ல முத்தியைக் காணார்கள், காண்பானும் காட்டுவதும் காண்பதுவும் தண் கடந்தைச் சம்பந்தன் வாட்டு நெறி வாராதவர் - ஆனால் காண்கின்றவனும் காட்டுகின்றவனும் காணப்படுகின்ற பொருளுமாகவோ காண்பார்கள் என்னில், அப்படிக் காண்கின்றவர்களும் குளிர்ச்சி பொருந்தின கடந்தைநகர் வாழ் சம்பந்தமாமுனிவன் வாட்டும்வழி வாராதவர்.

இதனால் ஞாதுரு ஞான ஞேயம் இஃதென்பது பெறப்பட்டது.

The seer, the sight and seen devoid one sees
True Freedom wont result. With seer and seen
And sight if they do see, they are those who
Fell not in the burning path of my great Lord.

NOTES-

This gives the true doctrine of Jnathuru, Jnana and Jneya. It does not mean that all such perception of God's Power and Bliss and Presence is lost. If so, there can be no real mukti. What is meant is there is no objective Perception of God by the soul or சுட்டுணர்வு. It is when the soul loses this சுட்டுணர்வு and sinks more and more into God, it can feel His Grace. 11

ஒன்றி நுகர்வதிவன் ஊணும் உறுதொழிலும்
என்றும் இடையில் இடம்இல்லை—ஒன்றித்
தெரியா அருள்மருதச் சம்பந்தா ! சேர்ந்து
பிரியாவா றெவ்வாறு பேசு.

ஒன்றி நுகர்வது இவன் ஊணும் உறு தொழிலும் என்றும் இடையில் இடம் இல்லை - இவன் சுதந்தர ஹீனனாகையால் ஆர்ச்சித்த வினைப்போகமும் செயலும் எக்காலத்தும் நீ அளிக்கப்பெறுவ தல்லது பிறிதிடம் இல்லை, ஒன்றி தெரியா அருள் மருதச்சம்பந்தா! - சர்வ வியாபியாயிருக்கையிலேயுந் தோன்றாத கருணைபொருந்திய மருதநகர்வாழ் சம்பந்தமாமுனிவனே!, சேர்ந்து பிரியா வாறு எவ்வாறு பேசு - தேவரீர் திருவடியைச் சேர்ந்து பிரியாமற் போகங்களைப் புசிக்குமுறைமை திருவுளம் பற்றவேண்டும்.

இதனால் கர்த்தாவே போகங்களைப் புசிப்பிக்கிறவனென்பது பெறப்பட்டது.

While one performs Karmic acts and eats fruits
There's e'er no place of his own self. O Lord
Who present every where dost shower Grace,
Say how I can ne'er separate after.

NOTES.

It is God that secures the deserts of each according to his karma, in bhanda, as He is with them in all their acts and in all their enjoyments. When freed also, though they perform karma it is God that enjoys the fruits of karma and not the Jivanmukta. They are not tainted by the karma they do, as had they dedicated all their acts to God. 12

அருளால் உணர்வார்க் ககலாத செம்மைப்
பொருளாகி நிற்கும் பொருந்தித்—தெருளா
விஞவெண்பா உண்மை விஞவாரேல் ஊமன்
கஞவின்பால் எய்துவிக்குங் காண்.

அருளால் உணர்வார்க்கு அகலாத செம்மைப் பொருளாகி நிற்கும் பொருந்தி - ஆசாரியன் அநுக்கிரகம் பெற்ற ஞானவான்களுக்கு விட்டு நீங்கி மலைவு வராமல் செம்மைப் பொருளாகவே பொருந்திநிற்கும், தெருளா விஞவெண்பா உண்மை விஞவாரேல் ஊமன் கஞவின்பால் எய்துவிக்குங் காண் - அறியத்தக்கதாக விஞவெண்பாவின் உண்மையை விஞவி அறியாதவர் ஊமன் கஞவில் பால்குடித்த லொக்கும்.

இதனால் இந்நூற்பெருமை இஃதென்பது பெறப்பட்டது.

With Grace one tries to know, its lasting truth
Will appear without doubt. If otherwise
They do not care to know this Poem's Truth
It will be like the fool in dream drinking middle. 13

வினாவெண்பா முற்றியது.

உ

திருச்சிற்றம்பலம்

கொடிக்கவி

KODIKKAVI

This is another short treatise forming one of the fourteen Siddhanta Sastras in Tamil. Our saint was put out of caste by the Chidambarm Dikshitars, of whom he was one, for partaking of the remnants of food eaten by his guru, Marai Jnana Sambandhar, whom he addresses in his *Vina Venba*. The time for performing the *Brahma Utsavam* of the Temple approached, and the Tillai priests tried to hoist the flag on the Dvajastamba; but it could not be tied. God appeared to the Dikshitars in their dream and they were told that the flag would go up only if they brought back our Saint. Our Saint lived in a hamlet of Chidambaram, which is on the other side of the Railway Station where his Samadhi can be seen even to day, called *Korravankudi*.

The priests repaired to him, brought him back on their shoulders and prayed to him that he might be pleased to hoist the flag. These verses were then composed.

> ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்ஒன்று
> 　　மேலிடில் ஒன்(று)
> ஒளிக்கும் எனினும் இருளடா தூள்
> 　　உயிர்க்குயிராய்த்
> தெளிக்கும் அறிவு திகழ்ந்துள தேனும்
> 　　திரிமலத்தே
> குளிக்கும் உயிரருள் கூடும் படிகொடி
> 　　கட்டினனே.

ஒளிக்கும் இருளுக்கும் இடம் ஒன்றே-ஆணவத்திற்கும் ஞானத்திற்கும் இடம் ஒன்றே, ஒன்று மேலிடில் ஒன்று ஒளிக்கும் - ஞானம் மேலிட்டகாலத்து ஆணவம் ஒளித்து நிற்கும், எனினும் இருள் அடராது - என்றாலும் ஞானத்தை ஆணவமலம் பொருந்தாது, உள் உயிர்க்கு உயிராய் தெளிக்கும் அறிவு திகழ்ந்துளதேனும் திரி மலத்தே குளிக்கும் - பண்டைய வாசனா விசேஷத்தாலே, உள்ளேகிடந்த சிவஞானம் சற்று விளங்கினாலும் மும் மலங்களிலே மூழ்கிக்கிடக்குமல்லாமல் அதுகொண்டே நீங்கமாட்டாது, உயிர் அருள் கூடும்படி கொடி கட்டினன்- இத்தகைய ஆன்மா அருளைப் பெறும்படி தீக்ஷாக்கிரமத்தினாலே மலங்களைப் போக்கத் துவசங் கட்டினேன்.

ஆணவத்திற்கும் ஞானத்திற்கும் இடம் ஒன்றாயிருந்தும் தனது காரணங் கெடாமலிருக்கின்ற மலத்தைத் தீக்ஷாக்கிரமத்

திறலே, போக்கி மோக்ஷத்தை அடைவிப்போமென்பது கருத்து.

Light dwells with darkness in same place
One does conceal the other when strong,
And yet darkness can't prevail.
The light of light of souls though shines
The soul is plunged in Trimala;
So that the soul may Grace attain
I hoist aloft the holy flag.

NOTES.

Man's light is veiled by Anava and he can't see the Light of God shining in him on account of this veil. But he need not despair. By undergoing Diksha, and becoming stead-fast in the four paths, he can rub out the dirt. The hoisting of the flag துவசம் கட்டுதல் means, in common parlance, making up one's mind to do a thing and do it to the finish. The aspirant after spirituality should have this determination first. Otherwise all his efforts will be fruitless. The light of God and evil inhering in man together is compared to the heat and moisture present in green wood. 1

பொருளாம் பொருளேது போதேது கண்ணே(து)
இருளாம் வெளியே திரவே(து) - அருளாளா
நீபுரவா வையமெலாம் நீஅறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி.

பொருள் ஆம் பொருள் எது - பொருளிலே அழி யாத பொருள் எது, போது எது - கிரணமான சத்தி எது, கண் எது - கண்போல ஆன்மா எது, இருள் ஆம் வெளி எது இரவு எது - அஞ்ஞானமான சகலம் எது கேவலம் எது, அருளாளா! - அருளை உடையவனே! நீ புரவா வையம் எலாம் நீ அறியக்கட்டினேன் - தேவரீர் புரக்கின்ற வையகத்திலே மலமாயாதி கன்மங்களிலே பொருந்தாமல் ஆன்மாக்களிடமாகப் பொருந்தியிருக்கின்ற உன் திருவருள் அறியக்கட்டினேன், கோபுரவாசல் கொடி - திருக்கோபுரவாசலிலே கொடி.

கர்த்தா, சத்தி, ஆன்மா, கேவலம், சகலம் இவை எதெனச் சொல்வாருமுளரோ வென்று கொடிகட்டினே னென்பது கருத்து. *

Which is the Sat of Sat, which Bloom ?
Who is the seer ? Which is light
In darkness sure, which night, ? Oh Grace !
In all the earth that owns your sway,
That Thou mayst know, in Tower's front,
I hoist aloft the holy flag.

NOTES

This sums up the Padarthas. Sat is God, the bloom Sivasakti, the Seer is the soul, the light in darkness is the Sakala condition of the soul after evolution of the world, where though plunged in darkness, the soul gains a little light by its will, action and

* The five things mentioned in the original are respectively the meanings of the five letters in the formula *Sivayanama*. —Editor.

intelligence being roused by the body made from Maya (*மாயா தனுவிளக்கு*). The night is the kevala condition. God is ever present in all through. His grace is invoked so that the soul may proceed onward. 2

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா வுணர்வரிய தன்மையனை - நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கும்அருள் நல்கக் கொடி.

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும் தாக்கா உணர்வரிய தன்மையனை - வாக்கினாலும் பெரியமனத்தினாலும் எப்பொழுதும் எட்டி அறிவதற்கு அரிதாகிய தன்மையுடையவனை, நோக்கி - விசாரித்துப் பார்த்து, பிரித்து - பகுக்குமிடத்து, அறிவு தம்மில் பிரியாமை தானே குறிக்கும் அருள் நல்கக் கொடி - அறிவினிடத்திலே அறிவாயிருக்கின்ற சிவத்தைப் பிரியாமல் குறித்து அருளைப் பெறத்தக்கதாகக் கொடிகட்டினேன்.

மனம் வாக்குக் காயங்களினாலே ஒருகாலும் எட்டப்படாதவனேனும் என்றும் பிரிவிலனென்பது கருத்து.

With speech and mind at any time
His nature rare is hard to find,
When seen too close, He doth appear
As Ananya, His grace to get
I hoist aloft the holy flag.

NOTES

This brings out God's Advaita relation to man. 3

**அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும்-நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி.**

அஞ்சு எழுத்தும் - சிவாயநம என்கிற ஐந்தெழுத்தும், எட்டு எழுத்தும் - ஓம் ஹாம் ஹௌம் சிவாயநம என்கிற எட்டெழுத்தும், ஆறு எழுத்தும் - ஓம் நமசிவாய என்கிற ஆறெழுத்தும், நால் எழுத்தும் - ஓம் சிவாய என்கிற நாலெழுத்தும் (உச்சரிக்கின்ற விதிப்படியே உச்சரித்து), பிஞ்சு எழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் நெஞ்சு அழுத்தி (விதிப்படி உச்சரிக்கின்ற முறைமையைவிட்டு ஸ்ரீ பஞ்சாக்கரத்தினுடைய சொரூபத்தை அறிந்து) பிஞ்செழுத்து என்னும் வகாரமாகிய பராசத்தியையும் மேலைப் பெருவெழுத்தென்னும் சிகாரமாகிய சிவத்தையும் தன்னுடைய இருதயத்திலே வைக்கில், பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும் கூசாமல் காட்டக் கொடி - பேசுமெழுத்தென்னும் வகாரமாகிய சத்தியும் பேசாவெழுத்தென்னும் சிகாரமாகிய சிவமும் இரண்டறக் கூசாமல் அழுத்துவிக்கக் கொடிகட்டினேன்.

பஞ்சாக்ஷரமுதலாகிய மந்திரங்களை உச்சரித்து அதன்பின்னர் அந்த மந்திரத்தினுள் அக்ஷரசொரூபத்தை யறிந்து சத்தி சிவான்மகமாயிருக்கின்ற அக்ஷரத்தை இருதயத்திலே வைத்தால் அந்தச் சத்திதானே சிவனை இரண்டறக் கலப்பிக்கும் என்பதறிந்து பஞ்சாக்ஷரத்தினலே மோக்ஷத்தையடையும்படி கொடி கட்டினேனென்பது கருத்து.

பஞ்சாக்ஷரமானது - தூலம் சூக்குமம் அதிசூக்குமம் என மூன்றும்; உச்சரிக்கு முறைமையுமப்படியேயாம். சிகாரம் சிவம்,

வகாரம் சத்தி, யகாரம் ஆன்மா, நகாரம் திரோதை, மகாரம் மலம் எனக்காண்க.

The letters five and eight and six
The letters four and 'Va' and 'Si'
These in the heart well impressed
The soundless one and that with sound
To manifest them without doubt
I hoist aloft the holy flag.

NOTES

The five syllabled mantra is 'Sivayanama'! the eight syllabled is Om ham haum Sivayanama; the six syllabled is 'Om Namasivaya'; the four syllabled is 'Om Sivaya'. The spoken syllable is said to be 'va' snd the unspoken syllable 'si'. All those mantras have reference to the passage of the Yogi fram the grosser to the more subtle of the avastas, which can be understood only by actual experience. 4

கொடிக்கவி முற்றியது.

உ

திருச்சிற்றம்பலம்

உண்மைநெறி விளக்கம்

LIGHT ON THE TRUE PATH

(This is also one of the fourteen Siddhanta Sastras, and it deals with the subject of Dasakarya or the Ten spiritual conquests of the soul. There are learned treatises on the subject in Sanscrit, but none of them has been translated into Tamil, nor are the original treatises available even in print. Sriman P. M. MUTTIAH PILLAI avergal of Tuticorin brought out a small brochure on the same subject in Tamil prose, over which a sharp controversy has raged. With all its faults it is however valuable. Dr. V. V. Ramanan's contribution to this Journal in vol X pp. 43-47 and 113-117 will also be of the utmost use to the student. *Dasa-Karyam* means ten kinds of actions or Karma and is not to be confounded with the three-fold karma which binds the soul and gives rise to birth and death and suffering.

On the other hand, these are steps taken by the aspirant for conquering birth and death. Though some of them have been set forth in the upanishads, it is in the Saiva Agamas that they have been clearly analysed and a full and complete code of action is given. These are actual psychical and spiritual processes, and unless they are practised and realised one cannot possibly understand them. We do not lay claim to any such knowledge or practice, but in pursuance of a certain duty, we place the letter of the law before the public, so that those who may have the grace, and the guidance of a true teacher may be profited by it. These Dasa karya are *Tattva Rupa. Tattva Darsana or Katchi, Tattva suddhi. Atma-Rupa, Atma Darsana. Atma suddhi. Siva-Rupa, Siva-Darsana. Siva-yoga, and Siva-Bhoga.* We may also mention that Katchihiappa Munivar, a disciple of the famous Sivajnana Munivar, gives a paraphrase of St. Umapathi Sivachariyar's verses in his learned TANIKAIPPURANAM NANDIUPADESAPADALAM verses 121 to 125)

மண்முதற் சிவமதீறாய் வடிவுகாண் பதுவே ரூபம்
மண்முதற் சிவமதீறாய் மலம்சடம் என்றல் காட்சி
மண்முதற் சிவமதீறாம் வகைதனில் தானி லாது
கண்ணுத லருளால் நீங்கல் சுத்தியாய்க் கருத லாமே.

கண்ணுதல் அருளால் - சற்குரவனது உபதேச மொழிகொண்டு, மண்முதல் - பிருதிவிதத்துவமுதலாக, சிவமது ஈறு ஆய் - நாததத்துவம் வரையும் உள்ள பிரபஞ்சத்தின், வடிவு - தொழிற்பாட்டை, காண்பதுவே - தெரிதலே, ரூபம் - தத்துவரூபம் (எனப்படும்); மண்முதல் - பிருதிவிதத்துவ முதலாக, சிவமது ஈருய் - நாதத்துவம் வரையும் உள்ள பிரபஞ்சம், மலம் சடம் என்றல் - மாயா காரியமென்றும் உணர்வில்லாததென்றும் அறிதல், காட்சி - தத்துவதரிசனம் (எனப்படும்); மண்முதல் - பிருதிவிதத்துவமுதலாக, சிவமது ஈறு ஆம் - நாததத்துவம் வரையும் (உள்ள), வகையதில் - தத்துவங்களில், தான் - ஆன்மா, நிலாது - பொருந்தாமல், நீங்கல் - விலகுதல், சுத்தியாய் - தத்துவசுத்தியென்று, கருதல் ஆம் - சொல்லப்படும்.

ஆன்மா தத்துவப் பிரபஞ்சங்களின் தொழிற்பாட்டையறிவது தத்துவரூபம்.

ஆன்மா தத்துவப் பிரபஞ்சங்களுக்கு உணர்வில்லையென்றறிவது தத்துவதரிசனம்.

ஆன்மா தத்துவப் பிரபஞ்சங்களின் வாயிலாய் முதல்வனையறிய முடியாதென்றுகண்டு அவைகளைவிட்டு விலகுதல் தத்துவ சுத்தி.

From Earth to Sivam each its form to see is
Tattva Rupa;
From Earth to Sivam, is each mala inert;
Perceiving this is Tattva Darsanam;
From Earth to Sivam, not established in them,
Through Siva's grace, one doth sunder oneself
Is Tattva Suddhi, so the wise declare.

NOTES

The word *Tattva* is defined by Professor Macdonnel as (thatness), very essence, true nature, truth, reality, principle-(especially one of the 25 in the Sankhyan philosophy). So that it really was synonymous with the word *Sat* and we have elsewhere shown how the compound *Sat* and *Asat** originally meant *Prakriti* or *maya* whose components were the 25 principles from earth to Prakriti of the Sankhyans and Vedantists. According to the Agamanta these *tattvas* are 36, 11 over and above the 25, the authorities for which see Sri Kasivasi Senthinathier's Tattva catechism. Man is other than 36 tattvas though bound in their toils. God is above the 36 tattvas. And the SVETASVATARA UPANISHAD declares "As a metal disk (mirror) tarnished by dust shines bright again after it has been cleaned so is the one incarnate person satisfied and free from grief after he has seen the real nature of his Atma (II. 14).

"And when by the real nature of his Atma, he sees as by a lamp, the real nature of Brahman, then having known the Unborn, Eternal Deva Who is beyond all Tattvas (sarvatattvairvisuddham) he is freed from all Pasa." (II. 15)

These two mantras, by the way, contain the gist of the Dasakarya, and the several steps in Salvation.

* The meaning is not clear, —Editor.

The nature of each tattva that binds one has to be seen, and that this in its nature is only matter and unintelligent and that it is impure, and after thus distinguishing the *tattvas* from himself, and knowing how he gets bound by identifying himself with them, he must get out of their hold, by holding to the Lord, and thus purify himself. This is *tattva suddhi* as shown in this verse and in the 14th Mantra. This does not involve, as we have repeatedly shown that we should regard these tattvas themselves as false or the bondage as false. These *tattvas** as their very root meaning shows are a truth in themselves, as also the bondage. We know how the bondage came about by identifying oneself with them, and the first step in cleansing oneself of this impurity, in getting freed of their fetters (Pasa), is to detach oneself from them (வகையதிற்றுணிலாது). In this heroic effort of the soul in its battle against all passion and the flesh, its true help is the unseen Helper, Whose grace is ever and always with us to *forerain* as the Devara Hymn puts it. Without its firm hold on God, this freedom is only a name, we have shown in our notes to *Siva-jnana Siddhiyar*. 1

பாயிருள் நீங்கி ஞானந்
தனைக்காண்டல் ஆன்ம ரூபம்
நீயும்நின் செயலொன் றின்றி
நிற்றலே தரிச னந்தான்

*In the same way as the word 'Sat' has come to mean God, the word Tattva has also come to mean God. (தத்துவன்)

போய்இவன் தன்மை கெட்டுப்
பொருளிற்போய் அங்குத் தோன்று
தாய்விடில் ஆன்ம சுத்தி
அருள்நூலின் விதித்த வாறே.

பாய் இருள் நீங்கி - பரந்த தத்துவங்களின் (உருவ தரிசன சுத்திகளுக்குப்) பின்னர், ஞானந்தனை காண்டல் - (ஆன்மா) தன்னியல்பை யறிதல், ஆன்பரூபம் - ஆன்ம ரூபம் (எனப்படும்), நீயும் - ஆன்மாவும், நின்செயல் - தான் செய்யக்கடவதொரு முயற்சி, ஒன்று இன்றி - வேறில்லா மல், நிற்றல் - (சிவமே தாரகமாய்) நிற்றல், தரிசனந் தான் - ஆன்மதரிசனம் (எனப்படும்), போய் இவன் தன்மை - (அங்ஙனம் சிவந்தாரகமாகச் சென்ற ஆன்மா வினது பசுஞானம், கெட்டு - மடங்கி, பொருளில் போய் - சிவஞானத்தின் வசமாய் நின்று, அங்கு - அந்நிலையில், தோன்றுதாயிடில் - (முன்னர்ப் பயிற்சிவயத்தாலுள்ள அஞ்ஞானம் மீளவும் அதன்மாட்டுப்) பிரவேசியாதிருந் தால், ஆன்மசுத்தி - ஆன்மசுத்தி (எனப்படும்). இவ் வுண்மை, அருள்நூலில் - வேதசிவாகமங்களில், விதித்த வாறே - சொல்லப்பட்டவிதம் (ஆகும்).

போய இவன் என்பது போயிவன் எனப் பெயரெச்சத்து அகரங்கெட நின்றது.

ஆன்மா தன்னியல்பை யறிதல் ஆன்மரூபம்.

ஆன்மாவின் இயல்பாவன:—

1. கண் இருளோடு சேர்ந்து இருளையும் ஒளியோடு சேர்ந்து ஒளியையும் அறிவதுபோல ஆன்மா அசத்தோடு சேர்ந்து அசத்தையும் சத்தோடு சேர்ந்து சத்தையும் அறிவது.

2. ஆகாயத்தின் தன்மையாகிய ஓசையானது பறைமுதலிய வற்றில் கடிப்பு முதலியனகொண்டு அடித்தால் மட்டும் வெளிப் படுவதுபோல ஆன்மா முதல்வன் அறிவித்தால் மட்டும் அறிவது.

3. படிகம் தான்சார்ந்த நிறத்தையே தன்னிறமாகக் கொள் வதுபோல ஆன்மா அசத்தைச் சார்ந்து அசத்தையும் சத்தைச் சார்ந்து சத்தையும் அநுபவிப்பது என்பனவே.

ஆன்மா இத்தனையையும் அறிவதால் வீட்டுக்குரிய சாதனத் தில் நின்று வீட்டைப்பெறும் அதிகாரம் தனக்கே யுண்டென்றும் அறியும்.

ஆன்மா தான் இதுவரை அசத்தினால் அறிந்து அசத்தினை அறிந்து அசத்தினை அநுபவித்துவந்த உண்மையையும், இனிமேல் சத்தினால் அறிந்து சத்தினை அறிந்து சத்தினை அநுபவித்துவரும் உண்மையையும் அறிவது ஆன்மதரிசனம்.

சற்குருவனால் ஆன்மா தன்னை இந்திரியங்களின் வேறாக உண ரும். அவ்வுணர்ச்சி யொன்றே காரணமாக அது தனக்காதார மாகிய சிவத்தின் திருவடியினைத் தலைப்படும். கயிறு அறுந்ததும் ஊசல் தான் ஒரு முயற்சியுஞ் செய்யாமல் தரையில் விழுந்து அத்தரையையே தனக்காதாரமாகக் கொள்வதுபோல.

ஆன்மா அசத்தாயுள்ள பாசத்தை அசத்தென்று கண்டு ஒருவுதலும், அப்படி ஒருவியவழித் தன்னிடத்துளதாகிய சிவ ஞானக்கண்ணினாலே சிவனை ஆராய்ந்தறிதலும், தொன்றுதொட் டுள்ள பழக்கத்தால் மலவாசனை இந்நிலையிலும் வந்து தாக்குத லுண்டாகையால் அவ்வாசனையை நீக்குதற்குப் பஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரித்தலும் ஆன்மசுத்தி.

அசத்தென்று கண்டு ஒருவுதலாவது பிரபஞ்சம் காரணரூபத்தில் வெறும்பொய்யென நினைந்திருத்தல்.

ஒருவுதலும் அறிதலும் சிவஞானம் ஆன்மாவின்மாட்டுப் பிரகாசித்தற்கு முறையே சாதனம். உச்சரித்தல் மலவாசனை நீங்குதற்குச் சாதனம்.

Great gloom removed, one sees his knowing self,
This is atma Rupa, It is Darsan
When you alone do stand, of actions shorn,
While losing self in Truth, one That becomes,
This is Atma Suddhi, Agamas say.

NOTES

In the chain of Salvation herein sketched one ring is attached to the other, One in a sense overlaps the other. The moment one detaches oneself from the *Tattvas* (Tattva Suddhi) one stands apart, and knows that he is not dead, inert and impure body, and that he is an intelligent being. This is Atma-rupa. Then he knows that all the afflictions he has been suffering from, from the enduring taint of *anava*, like hate and love, are no more his, as he is *Jnana svarupa*, and the afflictions were begotten of his identifying himself with the *Tattvas*. But though he can differentiate between non-intelligent tattvas and his own intelligent self and thus form an idea of his self, can he see his own form ? This will be thinking thought, an impossibility, like the eye trying to see itself. But still it is declared he could

cognise himself even though it be for a moment, before he plunges his self in the supreme self and becomes lost to view (Tattva suddhi). This sight of self is possible when after absolute detachment, one *stands still* without thought or action, like a flame undisturbed by wind in a sheltered spot. This is only for a moment as the next stage (atma-suddhi) supervenes at once. His momentary individuality is lost, and he indentifies himself with the supreme as he had just a few moments before been identifying himself with the *Tattvas.* The latter condition is '*ஆணவத்தோடு அத்துவிதம்*' and the former is '*மெய்ஞ்ஞானத்தாலுவிஞேடு அத்துவிதம்*'. So that except at the point of *Atma Darsana,* the soul never retains its individuality, but identifies itself with the Tattvas or God. Hence as I have elsewhere shown the fallacy of the Buddhists and Prachchana Buddhists who deny the reality and individuality of the soul. 2

> **எவ்வடி வுகளும் தானும் எழிற்பரை வடிவ தாகிக்**
> **கவ்விய மலத்தான் மாவைக் கருதியே ஒடுக்கி ஆக்கிப்**
> **பவ்வமீண் டகலப் பண்ணிப் பாரிப்பான் ஒருவ னென்றே**
> **செவ்வையே உயிருட் காண்டல் சிவரூப மாகு மன்றே.**

கவ்விய மலத்து - பந்தித்திருக்கும் ஆணவமலத்திற் கட்டுண்டிருக்கும், ஆன்மாவை - ஆன்மாக்களை, கருதியே - உத்தேசித்து, ஆக்கி ஒடுக்கி - (தனுகரணபுவன போகங்களைப்)படைத்து (காத்து) அழித்து, எவ்வடிவுகளும் - (கலப்பினால்) எல்லாப் பிரபஞ்சங்களையும், தான் ஆய் - சிவமாயுள்ள தானே என்னும்படி நின்று, எழில் பரை -

அழகிய திருவருளை, வடிவது - (தனக்குத்) திருமேனியாக, ஆகி - கொண்டு (வெளிப்பட்டு), பவ்வம் - (பொதுவியல்பைச் செய்யும்) உவர்த்தன்மையையுடைய இந்திரியங்களை, விண்டு அகல பண்ணி - வேறாக நீங்கிக் காணும்படி செய்து, பாரிப்பான் - ஆதாரமாக நிற்கின்றவன், ஒருவன் என்று - ஒப்பற்ற குருமூர்த்தியென்று, செவ்வையே - பிரதிக்கினை ஏது திருட்டாந்தங்களினால், உயிரில் காண்டல் - (ஆன்மா) தன்னறிவிலே பார்த்தல், சிவரூபம் ஆகும் - சிவரூபம் எனப்படும்.

இரும்பைக் காந்தமும், கயிறு அறுந்த ஊசலைத் தரையும் விகாரமின்றி நின்று இழுக்கும். அங்ஙனமே ஆன்மா இந்திரியங்களைத் தனக்கு வேறாகக் காணவே முதல்வன் அதனைத் தன்வழிப் படுத்து நிற்பன். இதனை ஆன்மா அறிவது சிவரூபம்.

இச்சிவரூபமே ஆன்மதரிசனத்தைப் பயக்கும்.

Becoming all forms, of the
Form of the beautiful Para,
Whirling the Soul in birth
and death in mala's noose,
There is One who doth remove
the sins and show great grace,
To see this One, in one's
soul bright is Siva Rupa.

NOTES

The soul regained its true form, when it detached itself from the Tattvas. It stood still for a moment and plunged itself in Sivam. Just at the moment of

the plunge, the soul gains a knowledge of the Form of God. But where is to be seen? Like his own, it is not individualised. The soul could however distinguish itself from God. He is not the sinning and mala bound soul. He is one who, joining it to the wheel of Samsara, by giving it Tanu, Karana, Bhuvana and Bhoga from maya, lifted it out of the deep darkness and caused malaparipaka and appeared in person as the Parama Guru and showed its grace, and entered its heart, of the size of the Thumb. And all this He became as He is pure chit, Parasakti. This perception of God as all, all is *Sivamayam*, is Siva Rupa. The importance of the word Sivamayam, which every one prefixes to his writing, will thus be apparent. It is an experience, and a great experience of the soul, which we should try to realize in all our actions, in all our thoughts. With this idea to guide us throughout, oh, how well our actions will be transformed from being Ahankara into Siva Akara. Then no evil will flow from our word and act and thought, but peace and good will, kindness and charity, love and Ananda. 3

பரைஉயிரில் யானெனதென் றறநின்ற தடியாம்
பார்ப்பிடமெங் குஞ்சிவமாய்த் தோன்றலது முகமாம்
உரையிறந்த சுகமதுவே முடியாகும் என்றிவ்
வுண்மையினை மிகத்தெளிந்து பொருள்வேறென் றின்றித்
தரைமுதலிற் போகாது நிலையினில்நில் லாது
தற்பரையில் நின்றழுந்தா தற்புதமே யாகித்
தெரிவரிய பரமானந் தத்திற் சேர்தல்
சிவனுண்மைத் தெரிசனமாய்ச் செப்பும் நூலே.

பரை - சிவசத்தி, உயிரில் - ஆன்மாவினிடத்தில், யான் எனது என்று - சுட்டறிவு என்பது, அற - நீங்கும்படி, நின்றது - நிலைபெற்றது, அடி ஆம் - (சிவனது) பாதமாகும். பார்ப்பிடம் எங்கும் - பார்க்கின்ற எவ்விடமும், சிவமாய் தோன்றலது - சிவமே விளங்கும்படி நிட்டை கூடல், முகம் ஆம் - (சிவனது) முகமாகும். உரை இறந்த சுகமதுவே - (அப்பொழுது அறிவுக்கறிவாகத் தன்மாட்டுத் தோன்றுகின்ற முதல்வனது) சொல்லுக்கடங்காத விளக்கமே, முடி ஆகும் - (சிவனது) முடியாகும். என்று - என்றிவ்விதமாக, இவ்வுண்மையினை - சிவனுக்கடிமையாம் உண்மையை, மிகத்தெளிந்து - அஞ்செழுத்தை உச்சரிக்கும் முறையில் வைத்துக் கண்டு, பொருள் - தனது சுதந்தரம், வேறு ஒன்று இன்றி - தனித்து நிகழ்வது நீங்கி, தரை முதலில் - பிருதிவி முதலிய தத்துவங்களோடு கூடுதலாகிய சகலாவத்தையில், போகாது - பொருந்தாமலும், நிலையினில் - கேவலாவத்தையில், நில்லாது - பொருந்தாமலும், தற்பரையில் - தனது சுகத்தில், நின்று அழுந்தாது - மயங்கி 'அகம் பிரமம்' என்று செருக்காமலும், அற்புதமே ஆகி - சிவத்தின் வண்ணமாகி, தெரிவரிய-அறிதற்கருமையாகிய, பரமானந்தத்தில் - மேலான ஆநந்த சொரூபனுகிய சிவனுக்கு, சேர்தல் - அடிமையாதலே, உண்மை - உண்மையான, சிவன் தரிசனம் ஆ - சிவதரிசனமென்று, நூல் செப்பும் - ஞான நூல்கள் சொல்லும்.

மலவாசனை நீக்கத்திற்குச் சாதனமாகப் பஞ்சாக்கரத்தை 'விதிப்படி' உச்சரிக்க என்றார். இது ஓதுமுறை. இனி அங்ஙனம் ஓதும்போது ஞாதிரு ஞான ஞேயப்பகுப்பிறந்து நின்று ஓதவேண்டும். இன்றேல் மலவாசனை நீங்காது. அங்ஙனம் பகுப்பிறக்கவேண்டுமேயானுல் முதல்வனேடு ஏகனுகி நிற்கவும் வேண்

டும். இது நிற்குமுறை. இங்ஙனம் ஓதுமுறையும் நிற்கு முறையுந் தம்முள் இயைபுடையன வென்பது கண்டுகொள்க.

பெத்தத்தில் ஆன்மா தன்னோடு உடனாய் நிற்கும் முதல்வனைத் தனக்கு வேறாகக் காணமாட்டாமல் 'அவனே தான்' என்று கருதுமாறு அம்முதல்வன் அவ்வான்மாவோடு ஒன்றுபட்டு அதன் வழியிலேயே நிற்கிறான். அதேவிதமாக இங்கு முதல்வனோடு உடனாய் நின்று அறிகின்ற ஆன்மா தன்னை அம்முதல்வனுக்கு வேறாகக் காணாமல் 'தானே அவன்' என்னும்படி அம்முதல்வனோடு ஒன்றுபட்டு அவன்வழியில் நிற்றல்வேண்டும். இதுவே முதல்வனோடு ஏகனாகி நிற்றலாம். இதுவே சிவதரிசனம்.

இச்சிவதரிசனமே ஆன்மசுத்தியைப் பயக்கும்.

நெருப்பு இரும்பைத் தன்வண்ணமாக்கி அதன் கறையைக் கெடுக்கும். அதுபோல முதல்வன் அங்ஙனம் ஏகனாகி அடிமைப்பட்டு நின்ற ஆன்மாவைத் தன் வண்ணமாக்கி மலத்தைக் கெடுப்பன்.

மலவாசனை யென்றது ஆணவமலத்தின் வாசனை. ஞேயம் காட்சிப்பட்டவிடத்தும் பயிற்சி வயத்தான் ஆன்மா முன்னர்த் தான் நோக்கிய பாசத்தையே நோக்கி நிற்கும். அந்நோக்கமே மலவாசனை. இவ்வாசனையே ஞாதாவும் ஞானமும் ஞேயமுமெனப் பகுத்துக் காணும் மயக்கவுணர்விற்கு ஏது. ஆகவே முதல்வனோடு ஏகனாகி நின்றால் இம் மலவாசனை நீங்கும்.

The Para's stand in soul, of I-ness
and my-ness freed, is Siva's Foot,
Where one sees God in all and every-
where, that is Siva's Face,

The Bliss that is past speech,
that alone is Siva's crown,
This truth perceiving well and
seeing naught else than God,
Not sliding back to earth and
like, not standing still,
Not plunging in the thought that
he is God, but sure becoming That,
To unite with that
Paramananda so unspeakable,
This the Vedas say
is Siva Darsanam.

NOTES

The experience gained in the seventh of the Dasakarya is carried further, and a closer, realization is reached in this eighth conquest of the soul. There are also certain dangers to be safeguarded in this experience. When one matures in the Sadana, there is naught else but God, he is likely to regard himself as God, which is Aham Brahma Jnanam. This will not only stop his progress further, but will lead him back into the wheel of Samsara; and thus all the uphill work achieved till now will end in nothing. On the other hand, he is absolutely enjoined to sink his individuality into the supreme, getting cleansed of his Ahankara and mamakara, and then God's grace enters his soul which is Saktinipada. This is PARA or SAKTI

and God's FOOT usually symbolises God's sakti or grace. The author follows the description of the crown as given in Tiruvachakam (18,i) "சோதிமணி முடிசொல்லிற் சொல்லிறந்து நின்றதொன்மை" "Wouldst hear of his bright jewelled crown? It is glory old that passeth speech." 4

எப்பொருள்வந் துற்றிடினும் அப்பொருளைப் பார்த்தங்
கெய்தும்உயிர் தனைக்கண்டிங்கவ்வுயிர்க்கு மேலாம்
ஒப்பில்அருள் கண்டுசிவத் துண்மை கண்டிங்(கு)
உற்றதெல்லாம் அதனாலே பற்றி நோக்கித்
தப்பினைச்செய் வதும்அதுவே நினைப்பும்அது தானே
தரும் உணர்வு புசிப்பும்அது தானே யாகும்
எப்பொருளும் அசைவில்லை யெனஅந்தப் பொருளோ
டியைவதுவே சிவயோகம் எனும்இறைவன் மொழியே.

இங்கு - (முதல்வனோடு ஏகனாகி நிற்கும் ஆன்மா) அப்படி நிற்கும்போது, எப்பொருள் வந்து உற்றிடினும் - எவ்வகைப் பிரபஞ்சங்கள் வந்து தாக்கினாலும், அப் பொருளைப் பார்த்து - அவைகளின் இயல்பை உள்ளவாறு உணர்ந்து (அவைகளையும்) அங்கு எய்தும் - அவைகளின் வசமாய் நிற்கின்ற, உயிர்தனைக்கண்டு - ஆன்மாக்களின் இயல்பை உள்ளவாறு உணர்ந்து (அப்பரதந்திரியத்தையும் நீக்கி), அவ்வுயிர்க்குமேல் ஆம் - தன்னை வியாபித்து விளங்குகின்ற, ஒப்பு இல் அருள் கண்டு - ஒப்பற்ற திருவருளில் (தான்) வியாப்பியமாயடங்கி, சிவத்து உண்மை கண்டு - சிவத்தினையே உணர்ந்து, இங்கு உற்றது எல்லாம் - இங்குத் தாக்குகின்ற மாயாகன்மங்களை எல்லாம், அதனாலே பற்றிநோக்கி - அவ்வுணர்வைப் பிடித்துக் கொண்டு நீக்கி, தப்பினை செய்வதும் - (பிறர் தனக்கு)

அகிதத்தையும் (இதத்தையும்) செய்வதை, அதுவே - முதல்வனே (செய்கின்றானெனவும்), நினைப்பும் - (தான் பிறருக்குச் செய்யும்) இதம் அகிதங்களை, அதுதானே - அம்முதல்வனே (செய்கின்றானெனவும் உணர்ந்தால்), தரும் உணர்வு - (அந்த ஆன்மா) ஆர்ச்சிக்கின்ற இதமகிதங்களையும், புசிப்பும் - (நுகரும்) இத மகிதங்களையும், அது தானே ஆகும் - (தனது ஆர்ச்சிப்பும் நுகர்ச்சியுமாக என்று கொள்பவன்) (அம் முதல்வனே யாவான் ஆகையால் அந்த ஆன்மா) எப்பொருளும் - எவ்வகைப் பொருள்களும், அசைவு இல்லை என - (சிவனையின்றித்) தொழிற்படாவென்று, அந்தப் பொருளோடு - அம்முதல்வனோடு கூடி, இசைவதுவே - அவன் பணியில் நிற்றலையே, இறைவன் மொழி - வேதசிவாகமங்கள், சிவயோகம் எனும் - சிவயோகம் என்று சொல்லும்.

பிரபஞ்சங்களின் இயல்பை யுணர்தலாவது அவைகளெல்லாம் முதல்வனால் தொழிற்படுவனவன்றித் தாமாகத் தொழிற்படுவன வல்லவென்பதைத் தெளிவாகத் தெரிதல்.

ஆன்மாக்களின் இயல்பை யுணர்தலாவது அவைகளின் இச்சா ஞானக்கிரியைகளெல்லாம் முதல்வனது இச்சா ஞானக்கிரியைகளால் தொழிற்படுவனவன்றித் தாமாகத் தொழிற்படுவன வல்லவென்பதைத் தெளிவாகத் தெரிதல்.

முதல்வனோடு ஏகனாகி நின்ற ஆன்மா அவ்விறைபணியில் வழுவாது நிற்றல் சிவயோகம்.

இறைபணியில் நிற்றலாவது அந்த ஆன்மா 'நீயே யெனக்குள் நின்று செய்கின்றாயாகலின் என்னாற் செய்யப்படும் இதமகிதமெல்லாம் நீ செய்யுஞ் செயலே' என்றும், 'நீயே பிறரைக்கொண்டு

செய்வித்துஞ் செய்கின்றாயாகலிற் பிறரால் எனக்கு வரும் இதமகிதங்களும் நீ செய்யுஞ்செயலே பிறிதில்லை' என்றும் அவனருளையல்லது ஒன்றையுங் கருதாமல் தன்னை இழந்து நிற்கப் பெறுவதே.

இவ்வாறு நிற்றற்குப் பயன் மாயைநீக்கமுங் கன்மநீக்கமுமாம். இங்கு மாயை என்றது அதன் காரியமாகிய மயக்க்வாசனையும், கன்மமென்றது ஆகாமிய வாசனையுமே.

ஆகவே முதல்வனோடு ஏகனாகி நிற்றலாகிய சிவதரிசனத்தாலும், அவ்விறைவனது பணிநிற்றலாகிய சிவயோகத்தாலும் வரும் பயன் மும்மல நீக்கமாகிய பாசவீடேயாம். உப்பு தன்சுவையை நீர்க்காக்குவதுபோல் இங்கு முதல்வன் தன்னைச் சேர்ந்த உயிரின்கண் தனது எண்குணங்களையும் பதிப்பித்து அதனைத் தன்னோடொப்பச் செய்து நிற்பன்.

Whatever befalleth one, he
    sees its truth
His self who doth it sense,
    and what transcends,
The grace beyond compare,
    The Lord Siva,
And views all that befell
    from that standpoint
And sees that from same
    grace flow good and bad
As do all sense
    and sense-experience,
And knows that naught
    can move except through Grace,

And unites self to Grace
that is Siva-yoga.

NOTES

All the published texts give the reading-Siva Boga* in the last line, but it is to be taken as meaning Siva-yoga, the ninth Dasakarya, both words meaning the same; and it has to be distinguished from the tenth Parabhoga. When one reached this condition, he is not affected by like and dislike, nor afflicted by pain and pleasure. He knows how they are caused, then are of the flesh and caused by his attachment to the flesh and he is not the body. Further becomes to look upon them from a higher stand point, from the stand point of Spirit. They have no power in themselves to affect souls, nor the souls to be affected unless this Chetana and Achetana Prapancha is willed to move by the supreme Power of God. All good and bad-ultimately flow from Him. He is the Final cause and cause of causes. And the final surrender is made 'not as I will, but as thou willst.' This is the ARPANA, SIVARPANA, set forth in the 10th Sutra of SIVA-JNANABODHA "ஏகனாகி இறைபணி நிற்க", "மலமாயை தன்னொடு வல்வினையின்றே" when the oneness, advaita union, is reached and all the mala, maya and karma lose their power and the final conquest over the flesh is reached-*Pasatchaya*; and the soul is landed in the bliss of the Parabhoga or Siva Bhoga, the last of the Dasakarya.- "பாசங்கழன்றாற் பசுவுக்கிடம் பதியாம்." 5

* Evidently this is a print mistake. —Editor.

பாதகங்கள் செய்திடினும் கொலைகளவு கள்ளுப்
பயின்றிடினும் நெறியல்லா நெறிபயிற்றி வரினும்
சாதிநெறி தப்பிடினும் தவறுகள்வந் திடினும்
தனக்கெனஓர் செயலற்றுத் தான்அதுவாய் நிற்கில்
நாதன்இவன் உடல்உயிராய் உண்டுறங்கி நடந்து
நானுபோ கங்களையுந் தானுகச் செய்து
பேதமற நின்றிவனைத் தானுக்கி விடுவன்
பெருகுசிவ போகமெனப் பேசுநெறி இதுவே.

தான் - இறைபணி நின்ற ஆன்மா, தனக்கு என ஓர் செயல் அற்று - அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யானுகி, அது ஆய் நிற்கில் - சுத்தாத்துவித சம்பந்தத்தால் முதல்வன் திருவடிகளில் ஏகமாகி நின்றுகொண்டால், பாதகங்கள் செய்திடினும் - பாவங்களைச் செய்தாலும், கொலை களவு கள்ளு பயின்றிடினும் - கொலை களவு கட்குடி யிவைகளில் நின்ருலும், நெறி அல்லா - நல்லொழுக்கமல்லாத, நெறி பயிற்றிவரினும் - தீ யொழுக்கங்களைச் செய்து வந்தாலும், சாதிநெறி தப்பிடினும் -சாதியாசாரங்களில் தவறிலுைம், தவறுகள் செய்திடினும் - (இன்னும் பல) குற்றங்களைச் செய்தாலும், (அவ்வான்மாவின் உடம்பில் நிகழும் பிராரத்த முழுவதையும்), அவன் உடல் (ஆய்) - அவ்வான்மாவே உடலாக, நாதன் உயிர் ஆய் - முதல்வன் (அவ்வுடலின்) உயிராக நின்று, உண்டு உறங்கி நடந்து - ஏன்று கொண்டு, நானு போகங்களையும் - பிராரத்தவினைக்கீடாக வரும் எல்லா விடயங்களையும், தான் ஆக செய்து - சிவபோக மாக்கி, பேதம் அற நின்று - தன் திருவடி அவ்வான்மாவை விட்டுக் கவர்த்தலின்றி, இவனை - அவ்வான்மாவை, தான் ஆக்கி விடுவன் - அதன் இயல்பு சிறிதுந் தோன்ருது அறிவிறந்து நிற்கு

மாறு தனது வியாபகத்துள் அடக்கி யாண்டு வருவன். இதுவே - இவ்வுண்மையே, பெருந் சிவபோகம் - மேலான சிவபோகம், எனப் பேசு நெறி - என்று சொல்லப்படும் உயர் நிலையாம்.

முதல்வன் ஆன்மாவுக்கு அறிவிச்சைசெயல்களை விளக்குதல் காட்டுமுபகாரம். விளக்கொளி கலந்த கண் விளக்கொளி கலந்த பொருளையே பார்க்கும். அப்படி ஆன்மா ஒரு பொருளை யறிதற்கு முதல்வன் அவ்வான்மாவை யதிட்டித்து அப்பொருளினுங் கலத்தல் வேண்டும். அதாவது ஆன்மா ஒரு பொருளை யறியும்போது முதல்வனும் அவ்வான்மாவோடு உடனின்று அறிதல்வேண்டும். முதல்வன் இவ்வாறறிதல் காணுமுபகாரம். இவ்விரண்டினும் காணுமுபகாரமே அத்துவித நிலையைத் தெளிய விளக்கும்.

இறைபணி நிற்கும் ஆன்மா முதல்வனுக்கு உடலாகவும், முதல்வன் அதனை யதிட்டித்து நிற்கும் உயிராகவும் இருப்ப அவ்வான்மாவுக்கு இந்நிலையில் விடயமாவது அம்முதல்வனே. ஆனால் முதல்வனைக் காண்பது உடலென நிற்கும் அவ்வான்மாவா? அல்லது உயிரெனநிற்குந் தானேயா? எனின் ஆன்மா அறிந்ததென்றும் தான் அறிந்தானென்றும் பிரித்தறிய முடியாதவாறு இருவரது அறிவும் ஒன்றனையொன்று விடாமல் ஒருங்கே விடயித்துச் செல்லுமென்க. எனவே அந்த ஆன்மாவின் பொருட்டு முதல்வனும் தன்னைக்கண்டு உபகரித்துவரும் அத்துவித நிலையை அவ்வான்மா அருட்கண்கொண்டு பார்க்கும். இப்படியாக முதல்வனையே விடயிக்கும் அவ்வான்மாவினது பிராரத்தமுழுவதையும் அவ்வான்மாவினிடமாக நின்று அம்முதல்வனே என்றுகொள்வன். ஆகையால் அவ்வான்மாவுக்குப் பிராரத்தவாதனையில்லை. இவ்வாறு மலங்களெல்லாம் நீங்கவே அவ்வான்மா முதல்வனது உபகாரத்தை அறிதலும் அதன்கண் இச்சை மீதூர்தலும் அதில் அழுந்தூதலுஞ் செய்யும். இதுவே சிவபோகம். இதுவே சிவப்பேறு.

இரத குளிகை பொன்னியல்பைக் காட்டாது தன்னுள்ளடக்கி நிற்பதுபோல இறைவன் உயிரை அதன் இயல்பு சிறிதுந் தோன்றாது அறிவிறந்து நிற்குமாறு தனது வியாபகத்துள் அடக்கி நிற்பன்.

Even though one commits heinous sins.
In murder, theft, and drink indulges
Treads paths which he ought not to tread,
Caste rules defies and makes mistakes
Atones with God, self action lost,
Our Lord doth convert sure his soul
Into His Body and own soul
And then it's He who eats and sleeps
And walks and transmutes all Bhoga
Into His own, all difference lost
He sure doth make the Soul Divine
This is the path called great Siva Bhoga.

NOTES

When the soul is finally cleansed of its sin, he dwells in God, and God dwells in him. He has absolutely no perception of any difference, between himself and God and other things. He enjoys the Bliss Supreme, and he is not even conscious he is so enjoying. In this condition, while he still retains the body, he is called the Jivan-mukta. As a result of this physical covering and environment, he comes into contact with other physical objects and things. Actions necessary follow, and whatever they may be the jivan-mukta is

not responsible. No taint can attach to him, as all his TANU, KARANA, BHUVANA and BHOGA had all been converted into Siva-Tanu, Siva-Karana, Siva Bhuvana and Siva-bhoga. The only condition is the soul must lose all sense of self and the feeling that he is the actor. Then all his acts and burdens become those of the Lord. This is God's great Atonement so wrongly understood in Christian teaching.

Saint Chandesvara Nayanar's act in felling his father, and St. Manickavachaka's spending the treasure of his sovereign are mentioned as instances of the principle herein enunciated. *

உண்மைநெறிவிளக்கம் முற்றியது.

* We are greatly handicapped in the the proof-reading of the English translation of *Kodikkavi* and *Unmainerivilakkam*, as we had to do it without the printed original; and, in conquence we could not make bold to make a few corrections that seemed necessary.

—Editor.

தருமபுர ஆதீன வெளியீடுகள்

தொ.	பெயர்	வருஷம்
1	குருஞானசம்பந்தசுவாமிகள் தாலாட்டு	1924
	,, இரண்டாம்பதிப்பு	1944
2	நித்திய கன்மநெறி	1927
3	திருமுல்லைவாயிற் புராணம்	1927
4	திரிபதார்த்தரூபாதி தசகாரிய அகவல்	1927
5	சித்தாந்த நிச்சயம்	1928
6	சம்பிரதாய தீபம்	1928
7	வருணாசிரம சந்திரிகை	1930
8	சிகாரத்தின மாலை	1930
9	திருப்பதிகமும் பஞ்சரத்தினமும்	1930
10	தசமணிமாலை	1930
11	ஞானசம்பந்த குருராய வட்டகமும், சந்திரகலா மாலையும்	1930
12	திருவையாற்றுப் புராணம்	1930
13	சிவானந்தபோதசாரம்	1931
14	சோடசகலாப்பிராசாத சட்கம்	1931
15	சைவசன்யாச பத்ததி	1932
16	சிவபோகசாரம	1932
	,, இரண்டாம்பதிப்பு	1936
17	சிவப்பிரகாசக்கட்டளை	1932
	,, இரண்டாம்பதிப்பு	1939
18	உ௩-வது மகாசந்நிதானத்தின்மீது பலர் பாடிய தோத்திரப் பாடற்றிரட்டு	1933
19	திருத்துருத்திப் புராணம்	1933
20	ஞானசரிதை	1934

நெ.	பெயர்	வருஷம்
21	முத்தி நிச்சயம் சிற்றுரையுடன்	1934
22	அறிவானந்த சமுத்திரம்	1935
23	பண்டாரமும்மணிக்கோவை	1937
24	இந்துமத பாலபாடம்	1937
25	சிதம்பரச் செய்யுட்கோவை உரையுடன்	1937
26	திருவையாற்றுத் தலமகிமைச் சுருக்கம்	1937
27	கிளிவிடு தூது	1938
28	திருமுலைப்பால் சிறப்பு	1939
	,, இரண்டாம்பதிப்பு	1941
29	பதி பசு பாசத்தொகை	1940
30	ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஞானதேசிகர் நான்மணிமாலை	1940
31	திருபுவனத்தலமகிமைச் சுருக்கம்	1940
32	கீர்த்தித்திருவகவல்	1941
33	ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகளின் வரலாறும் சில பாசுரங்களும்	1941
34	வைத்தீஸ்வரன்கோயில் தேவாரம் திருப்புகழ்	1941
35	திருத்தொண்டத்தொகையும் அசபாநடன பதிகமும்	1941
36	குங்கிலியக்கலய நாயனார் அன்பின்திறம்	1941
37	திருக்கடவூர்த் தேவாரம் திருப்புகழ்	1941
38	திருவையாற்றுத் தேவாரம் திருவாசகம் திருப்புகழ்	1941
39	புள்ளிருக்கு வேளூர்ப் புராணம்	1941
40	சித்தாந்த சைவ வினாவிடை	1941
41	நால்வர்சரித்திரமும்அற்புத்ததேவாரத்திரட்டும்	1941
42	ஆச்சாள்புரத் தலவரலாறு	1941
	,, இரண்டாம்பதிப்பு	1943
43	திருவையாற்றுத் தலவரலாறு	1941
	,, இரண்டாம்பதிப்பு	1943

தொ.	பெயர்	வருஷம்
44	ஸ்ரீ சுப்பிரமணியர் திருவவதாரமும் கந்தர்கலிவெண்பாவும்	1941
45	தருமபுர ஆதீனம் மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு திருமுறைத்திருநாள்	1941
46	சிவபூஜாவிதி	1941
47	சைவாநுட்டானவிதி	1941
48	திருக்கடவூர் உலா குறிப்புரையுடன்	1941
49	திருப்பாடல்கள்	1942
50	விநாயகர் அகவல்கள்	1942
51	சீகாழித் தலவரலாறு	1942
52	மெய்கண்ட சாத்திரம் மூலம்	1942
53	கற்குடித் தலவரலாறு	1943
54	நீதிநெறி விளக்கம்	1943
55	திருவாரூர் நான்மணிமாலை மூலமும் வசனமும்	1943
56	சகலகலா வல்லிமாலை மூலமும் உரையும்	1943
57	கந்தரனுபூதி	1943
58	குத்தாலத் தலவரலாறு	1943
59	குறுக்கைத் தலவரலாறு	1943
60	திருபுவனத் தலவரலாறு	1943
61	திருக்கடவூர்த் தலவரலாறு	1943
62	புள்ளிருக்கு வேளூர்த் தலவரலாறு	1943
63	திருப்பனந்தாள் தலவரலாறு	1943
64	பத்தாண்டு ஆட்சி மலர்	1943
65	அப்பர்சுவாமிகள் புராணம் விரிவுரையுடன்	1944
66	மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு திருமுறைத்திருநாள் நிகழ்ச்சிகள்	1944
67	சிவஞானபோத சூத்திரக்கட்டுரை	1944

உ ௵-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல்-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய

சுவாமிகளால் வெளியிடப்பட்டவை.

செ.	பெயர்	வருஷம்
68	ஞானசம்பந்தர் வழங்கிய ஞானவுரை	1945
69	சிவப்பிரகாசம் (ஆங்கிலமொழிபெயர்ப்புடன்)	1945
70	தருமபுர ஆதீன நூல்நிலையப் புத்தகப்பட்டி.	1945
71	புள்ளிருக்குவேளூர்த் திருப்பதிகங்கள்	1945
72	பஞ்சாவரணத் தோத்திரங்கள்	1945
73	சிதம்பரத்துத் திருப்பதிகங்கள்	1945
74	ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி திருவருட்பா	1945
75	திருவேட்களத் திருப்பதிகங்கள்	1945
76	திருநெல்வாயில் திருப்பதிகம்	1945
77	திருக்கழிப்பாலைத் திருப்பதிகங்கள்	1945
78	திருநாரையூர்த் திருப்பதிகங்கள்	1945
79	தருமபுர ஆதீன ஆவணிமூலத்திருநாள்	1945
80	ஆச்சாள்புரத் திருப்பதிகங்கள்	1945
81	திருமயேந்திரப்பள்ளித் திருப்பதிகம்	1945
82	திருத்துருத்தித் திருப்பதிகங்கள்	1945
83	திருமங்கலக்குடித் திருப்பதிகங்கள்	1945
84	திருக்கோளிலித் திருப்பதிகங்கள்	1945
85	திருக்கடவூர்த் திருப்பதிகங்கள்	1945
86	சிவஞானபோதம் ஆங்கிலமொழிபெயர்ப்பு	1945
87	சோமவார விரதம்	1945
88	திருநீறு	1945
89	உருத்திராக்கம்	1945
90	ஐந்தெழுத்து	1945

தெ.	பெயர்	வருஷம்
91	கந்தசஷ்டிவிரதச்சிறப்பு (திருமுருகாற்றுப்படையுடன்)	1945
92	திருவருட்பயன் (ஆங்கிலமொழிபெயர்ப்புடன்)	1945
93	தென்திருமுல்லைவாயில் திருப்பதிகம்	1945
94	ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை	1946
	,, இரண்டாம் பதிப்பு	1946
95	திருக்கலிக்காமூர்த் திருப்பதிகம்	1946
96	தருமபுர ஆதீனப் பாடசாலை நிர்ணயவிதிகள்	1946
97	திருநெல்வேலித் திருப்பதிகம்	1946
98	திலகவதியார்	1946
99	சீகாழித் திருப்பதிகங்கள்	1946
100	திருக்கோலக்காத் திருப்பதிகங்கள்	1946
101	திருக்குருகாவூர்த் திருப்பதிகங்கள்	1946
102	திருச்சாய்க்காட்டுத் திருப்பதிகங்கள்	1946
103	திருப்பல்லவனீச்சரத் திருப்பதிகங்கள்	1946
104	திருவெண்காட்டுத் திருப்பதிகங்கள்	1946
105	கீழைத்திருக்காட்டுப்பள்ளித் திருப்பதிகம்	1946
106	வினாவெண்பா, கொடிக்கவி, உண்மைநெறி விளக்கம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	1946